விருதுநகர் மாவட்டம்

முழு ஆண்டுத் தேர்வு - 2025

-----

வகுப்பு 9

காலஅளவு: 3.00 மணிநேரம் | தமிழ் | மதிப்பெண்கள்: 100

பகுதி - I (மதிப்பெண்-15)

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 15×1=15

ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் சரியான விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்

1) தமிழ்நாடு அரசு கிராமபுற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?
அ) தேசிய திறனறித் தேர்வு ஆ) ஊரகத் திறனறித் தேர்வு
இ) தேசிய திறனறி,கல்வி உதவித்தொகை ஈ) மூன்றும் சரி

2) உலகத் தாய்மொழி நாள் ........
அ) பிப்ரவரி 21 ஆ) பிப்ரவரி 28 இ) ஜனவரி 26 ஈ) பிப்ரவரி 14

3) தமிழில் ஏறத்தாழ ........... துணைவினைகள் உள்ளன
அ) 46 ஆ) 56 இ) 30 ஈ) 40

4) பெண்மையை முதன்மைப்படுத்தும் புரட்சிக்காப்பியம் எது?
அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை
இ) யசோதர காவியம் ஈ) சீவகசிந்தாமணி

5) 'இம்மை செய்தது மறுமைக்கு ஆமெனும்' எனும் கூறும் நூல் ........
அ) திருக்குறள் ஆ) தொல்காப்பியம் இ) பரிபாடல் ஈ) புறநானூறு

6) பெரியார் தோற்றுவித்த இயக்கம் ..........
அ) குடும்பநலத்திட்டம் ஆ) சுயமரியாதை
இ) குலக்கல்வித்திட்டம் ஈ) மணக்கொடை

7) 'மல்லல் மூதூர் வய வேந்தே' - மல்லல் இச்சொல்லின் பொருள்
அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய

8) கீழ்க்காண்பனவற்றுள் வரையறைப் பொருளில் வரும் இடைச்சொல் எது?
அ) மட்டும் ஆ) தான் இ) ஆவது ஈ) உம்

9) இளைய கலாம் என்று அன்புடன் அழைக்கப்படுபவர் ..........
அ) அருணன் சுப்பையா ஆ) வளர்மதி
இ) மயில்சாமி அண்ணாதுரை ஈ) சிவன்

11) உலகப்பண்பாட்டிற்குத் தமிழனத்தின் பங்களிப்பாக அமைந்த நூல் ...........
அ) மணிமேகலை ஆ) புறநானூறு
இ) திருக்குறள் ஈ) பெரியபுராணம்

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக**

*நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்*
*உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!*
*உண்டி முதற்றே உணவின் பிண்டம்*
*உணவெனப் படுவது நிலத்தொடு நீரே*

12) இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் .........
அ) இராவணகாவியம் ஆ) பெரியபுராணம் இ) புறநானூறு ஈ) மணிமேகலை

13) நீரும் நிலமும் என்பதன் இலக்கணக்குறிப்பு
அ) எண்ணும்மை ஆ) பண்புத்தொகை இ) வினைத்தொகை ஈ) பெயரெச்சம்

14) இப்பாடலின் ஆசிரியர் ........
அ) இளங்கோவடிகள் ஆ) புலவர் குழந்தை
இ) சேக்கிழார் ஈ) குடபுலவியனார்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

15) இப்பாடலில் உள்ள எதுகைச் சொற்களை எழுதுக

அ) உண்டி கொடுத்தோர் - உண்டி முதற்றே

ஆ) உண்டி - உணவு

இ) உண்டி கொடுத்தோர் - உயிர் கொடுத்தோரே

ஈ) உணவின் பிண்டம் - உணவெனப்படுவது

பகுதி - II

பிரிவு - 1 4×2=8

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.**

**(21-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க)**

16) அ) குடும்ப விளக்கு என்னும் நூலை எழுதியவர் பாரதிதாசன் ஆவார்

ஆ) தமிழர்களின் பண்பாட்டுத் திருவிழாவாக ஏறுதழுவுதல் விளங்குகிறது?

17) பட்டிமண்டபம், பட்டிமன்றம் - இரண்டும் ஒன்றா? விளக்கம் எழுதுக

18) வீணையோடு வந்தான். கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக

19) இணைய வழியில் இயங்கும் மின்னணு இயந்திரங்கள் எவையேனும் ஐந்தினைக் குறிப்பிடுக

20) தாய்நாட்டுக்காக உழைக்க விரும்பினால் எப்பணியைத் தேர்ந்தெடுப்பீர்கள்? ஏன்?

21) தலை - என முடியும் திருக்குறளை எழுதுக

பிரிவு - 2 5×2=10

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.**

22) **பிழை நீக்கி எழுதுக**

சர் ஆர்தர் காட்டன் கல்லணையின் கட்டுமான உத்திகொண்டுதான் தௌலீஸ்வரம் அணையை கட்டியது

23) இடிகுரல், பெருங்கடல் - இலக்கணக்குறிப்புத் தருக

24) **கலைச்சொல் எழுதுக**

அ) Water Management ஆ) Cultural Academy

25) **அகராதியில் காண்க.**

அ) தாமம் - ஆ) நகை -

26) **ஒரு சொல்லால் தொடரின் இரு இடங்களை நிரப்புக**

எண்ணெய் ஊற்றி - விளக்கு ஏற்றியவுடன் இடத்தை விட்டு .........

27) **மரபுத் தொடர்களைக் கொண்டு தொடர் அமைக்க**

அ) எட்டாக்கனி ஆ) மேளதாளத்துடன்

28) **இடைச்சொற்களைக் கொண்டு தொடர்களை இணைக்க**

பழனிமலை பெரியது: இமயமலை மிகப்பெரியது

பகுதி - III

பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடைதருக.** 2×3=6

29) குறிப்பு வரைக - டோக்கியோ கேடம்ஸ்

30) பள்ளி மாணவர்களுக்கான தமிழக அரசின் இணையவழிச் சேவைகளை எழுதுக

31) **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக**

பாண்டி மண்டலத்து நிலப்பகுதியில் ஏரியைக் கண்மாய் என்று அழைப்பர். கம்மாய் என்பது வட்டார வழக்குச் சொல்லாகும். மணற்பாங்கான இடத்தில் தோண்டிச் சுடுமண் வளையமிட்ட கிணற்றுக்கு உறைக்கிணறு என்றும் மக்கள் பருகுநீர் உள்ள நீர்நிலைக்கு ஊருணி என்றும் பெயர் சூட்டியுள்ளனர்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

அ) கண்மாய் என்பதன் வட்டார வழக்குச் சொல் யாது?

ஆ) மக்கள் பருகுநீர் உள்ள நீர்நிலையின் பெயர் யாது?

இ) உறைக்கிணறு என்பது யாது?

பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடைதருக. **2×3=6**

(34-ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)

32) யசோதர காவியம் வெளிப்படுத்தும் வாழ்க்கை நெறிகளைத் திருக்குறளுடன் ஒப்பிட்டு எழுதுக

33) அறிவையும் உயிரினங்களையும் தொல்காப்பியர் எவ்வாறு தொடர்புபடுத்துகிறார்.

34) **அடிபிறழாமல் எழுதுக**

அ) அள்ளல் பழனத்து ......... எனத் தொடங்கும் முத்தொள்ளாயிரம் பாடல்

**(அல்லது)**

ஆ) சைக்களில் வந்த .......... எனத் தொடங்கும் அக்கறை பாடல்

பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடைதருக.** **2×3=6**

35) விகாரப் புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவை யாவை? எடுத்துக்காட்டுடன் விளக்குக

36) வஞ்சப்புகழச்சியணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக

37) கானாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாட்டு தருக

38) அ) இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரிக்க

**(அல்லது)**

ஆ) குடும்ப விளக்கு நூலில் தலைவி பேச்சில் வெளிப்படும் பெண்கல்விக்கான கருத்துகளை இன்றைய சூழலுடன் ஒப்பிட்டு எழுதுக

39) அ) உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் - தமிழ் - ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப்படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) உங்களின் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் நா.முத்துக்குமாரின் 'அணிலாடும் முன்றில்' என்னும் நூல் குறித்து கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

40) **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக**



பகுதி - IV (மதிப்பெண்கள்-25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க** **5×5=25**

41) **நயங்களைப் பாராட்டி எழுதுக**

வயலிடைப் புகுந்தாய் மணிக்கதிர் விளைத்தாய்
வளைந்துசெல் கால்களால் ஆறே!

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

அயலுள ஓடைத் தாமரை கொட்டி
 ஆம்பலின் இதழ்களை விரித்தாய்
கயலிடைச் செங்கண் கருவரால் வாளை
 கரைவளர் தென்னையில் பாயிப்
பெயரிடைப் பட்ட வானெனத் தோன்றும்
 பெருங்களும் நிறைத்து விட்டாயே!

- வாணிதாசன்

42) அ) **மொழிபெயர்க்க**

Once Buddha and his disciples were thirsty. They reached a lake. But it was muddy because somebody just finished washing their clothes. Buddha asked his disciples to take a little rest there by the tree. After half an hour the disciples noticed that the water was very clear. Buddha said to them," You let the water and the mud be settled down on its own. Your mind is also like that. When it is disturbed, just let it be. Give a little time. It will settle down on its own. We can judge and take best decisions of our life when we stay calm."

**(அல்லது)**

ஆ) சமூகத்திற்கு நீ செய்ய வேண்டிய பணிகள் ஐந்தினை எழுதுக

## பகுதி - V (மதிப்பெண்கள்: 24)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க** **3×8=24**

43) அ) இந்திய தேசிய இராணுவத்தின் தூண்களாகத் நிகழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பதைக் கட்டுரை வழி நிறுவுக

**(அல்லது)**

ஆ) ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க

44) அ) நூலகம், நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகிற கருத்துக்கள் யாவை?

**(அல்லது)**

ஆ) 'தாய்மைக்கு வறட்சி இல்லை' என்னும் சிறுகதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப்படைப்பை விளக்குக

45) அ) 'எனது பயணம்' என்னும் தலைப்பில் உங்களது அனுபவங்களை வருணித்து கட்டுரை வடிவில் எழுதுக

**(அல்லது)**

ஆ) நீங்கள் விரும்பிப்படித்த நூல் ஒன்றுக்கு மதிப்புரை எழுதுக.

- - - - - -

www.Padasalai.Net